සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

# දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
# தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
# Department of Education, Southern Province

## අවසාන වාර පරීක්ෂණය - 2025
## இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය தரம் Grade 07 | සෛවනෙරි - SEIVANERY | කාලය நேரம் Time 2 මණි |

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

**මිග පොරුත්තමාන විටෙයින් කීළ් කෝටිටුක.**

**பகுதி - 1**

01. "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து" என்பதில் விளக்கப்படுவது.

1. இறைபக்தி 2. பணிவுடைமை 3. கல்விகற்றல் 4. நன்றிமறவாமை

02. "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" எனப் பாடிய அடியார்.

1. திருஞான சம்பந்தர் 2. கச்சியப்ப சிவாச்சாரியார் 3. சுந்தரர் 4. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

03. கோதாவரி புனித நதியில் ஒரே நாளில் 108 முறை நீராடும் பேற்றினைப் பெற்றவர்

1. ஏக நாதர் 2. அநபாயச் சோழன் 3. விவேகாநந்தர் 4. இராஜகுமாரன்

04. பின்வருனவற்றில் பஞ்சமாபாதங்களாக அமைவன.

1. கொலை,களவு,ஒளடதம்,உண்ணல்,பொய்,காமம் 2. கொலை,களவு,கல் உண்ணல்,பொய்,காமம்
3. களவு,உண்மை பேசுதல்,பொறாமை,காமம்,வெகுலி 4. கொலை,பொறாமை,உண்மை பேசுதல்,காமம்,நேர்மை

05. இலங்கையில் கொத்துக் குளம் அம்மன் ஆலயம் அமைந்துள்ள மாவட்டம்

1. மட்டக்களப்பு 2. கொழும்பு 3. நுவரெலியா 4. களுத்துறை

06. தீர்த்தம் : துர்க்கா புஸ்கரணி,இலுப்பை மரத்தை தலவிருட்சமாகவும் கொண்ட ஆலயம்

1. நகுலேச்சரம் 2. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
3. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் 4. கதிர்காமம்

07. இறைவனின் ஐந்தொழில்களில் "மறைத்தலை" மேற்கொள்ளும் திருமேனியானது

1. சதாசிவம் 2. உருத்திரன் 3. மகேசுவரன் 4. விஷ்ணு

Past Papers Wiki

08. பின்வருவனவற்றில் இறைவனின் எண்குணங்களில் அடங்காதது

1. பேரருளுடைமை 2. தூய உடம்பினனாதல் 3. வரம்பில் முதிர்ச்சியுடைமை 4. முற்றுமுணர்தல்

09. சைவவித்தியா விருத்திச் சங்கத்துடன் தொடர்புடையவர்

1. சேர். பொன் இராமநாதன் 2. சேர்.பொன் அருணாச்சலம்
3. விவேகாநந்தர் 4. ஔவையார்

10. சமய குரவர்கள் வரிசையில் ஞான நெறி நின்று முக்தியடைந்தவர்

1. திருஞானசம்பந்தர் 2. மாணிக்கவாசகர் 3. திருநாவுக்கரசர் 4. சுந்தரர்

11. திருநாவுக்கரசர் "சொற்றுணை வேதியன் சோதிவானவன்" எனும் திருப்பதிகத்தை பாடிய சந்தர்ப்பமாக அமைவது

1. சமணர்கள் நீற்றறையில் அடைத்த போது 2. மதம் கொண்ட யானையை ஏவிவிட்ட போது
3. கல்லோடு கட்டிக் கடலில் போட்ட போது 4. திருமறைக்காட்டில் கதவினை திறப்பதற்கு

12. "தென்புகலி வேந்தன்" எனும் சிறப்பு பெயர் பெற்றவர்

1. திருஞானசம்பந்தர் 2. சுந்தரர் 3. திருநாவுக்கரசர் 4. மாணிக்கவாசகர்

13. பின்வருவனவற்றில் சரியைத் தொண்டாக அமைவது

1. திருமணம் செய்வது 2. கல்வி கற்பது
3. குடை,கொடி,ஆலவட்டம் என்பவற்றை பிடித்தல் 4. தினமும் குளித்து கோயிலுக்கு போதல்

14. ஆலயத்தினுள் மும்முறை கைகொட்டி இறுதியாக வழிபடப்படும் கடவுளர்

1. முருகன் 2. சண்டேஸ்வரர் 3. வைரவர் 4. விநாயகர்

15. கதிர்காமத் தலத்தின் மீது பாடப்பட்ட பாடலாக அமைவது

1. வேதநெறி தலைத்தோங்க..... 2. குழலொலி யாழொலி.....
3. உலகெல்லாம் உணர்ந்து..... 4. இறவாமல் பிறவாமல் எனை.....

16. சிவபெருமானால் " அம்மையே " என அழைக்கப்படும் பேற்றினை பெற்றவர்

1. திலகவதியார் 2. ஔவையார் 3. காரைக்காலம்மையார் 4. மாதினியார்

17. திருமுறைகளுக்கு பண் அமைத்தவர்

1. சுந்தரர் 2. நம்பியாண்டார் நம்பி 3. மதங் சூளாமணி 4. கச்சியப்பர்

Past Papers Wiki

18. உத்தராயணத்தின் தொடக்க நாளான முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகையாக அமைவது

1. சித்திரைப் புத்தாண்டு 2. தீபாவளி 3. தைப்பொங்கள் 4. நவராத்திரி

19. பஞ்சாங்கத்தின் படி நட்சத்திரங்களின் எண்ணிக்கையாக அமைவது

1. 20 2. 27 3. 40 4. 12

20. பின்வருவனவற்றில் நட்சத்திரங்களின் அடிப்படையில் அனுஷ்டிக்கப்படும் விரதமாக அமைவது

1. சோமவார விரதம் 2. சங்கடஹர சதுர்த்தி 3. ஏகாதசி விரதம் 4. மாசிமகம்

**(2X20 =40 புள்ளிகள்)**

## பகுதி – 2

**முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**(01) கீழ்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதி பாடலைப் பாடியவர்,பாடப்பட்ட தலம் என்பவற்றினை எழுதுக.**

அ. "விருது குன்றமா மேருவில்...." ஆ. "நத்தார் படை ஞானன்பசு...."

இ. "பொன்னார் மேனியனே புலித்...." ஈ. "முக்தி நெறியறியாத மூர்க்கரோடு..."

**(5+1/2+1/2X2 =12 புள்ளிகள்)**

**02. "வாழ்வை நெறிப்படுத்துவதில் விரதம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்"**

1. விரதம் பற்றிய ஆறுமுக நாவலரின் விளக்கத்தை எழுதுக?
2. விரதங்களை எவ்வடிப்படையில் நாம் கடைப்பிடிக்கின்றோம்?
3. சைவ சமயத்தவர்கள் தைப்பூச தினத்தில் மேற்கொள்ளும் சுப கருமங்கள் எவை?
4. மாசிமகத்தின் சிறப்பம்சம் என்ன?

**(4+2+2+4 =12 புள்ளிகள்)**

**03. "மனிதனிடத்தில் சிந்தனை,செயல்,இறையுணர்வை ஏற்படுத்துவது பண்டிகைகள் ஆகும்."**

1. பண்டிகைகளை கொண்டாடுவதனால் நாம் பெறும் பயன்கள் எவை?
2. "மகர சங்கிராந்தி" என்பதனை விளக்குக?
3. தைப்பொங்களுக்கு வழங்கப்படும் வேறுப் பெயர்கள் நான்கினைத் தருக?
4. தைப்பொங்கல் தினத்திற்கு முந்திய நாளிலும் அடுத்த நாளிலும் கொண்டாடப்படும் பண்டிகைகளின் பெயர்களைத் தருக?

**(2+4+2+4 =12 புள்ளிகள்)**

**04. "தெய்வீக உணர்வினை ஏற்படுத்துவன திருமுறைகளாகும்"**

1. திருமுறை என்றால் என்ன?
2. பன்னிரு திருமுறைகளில் முதல் ஒன்பது திருமுறைகளைக் குறிப்பிடுக?
3. திருமுறைகளை தொகுத்தவர், தொகுப்பித்தவர்களைக் குறிப்பிடுக?
4. திருமுறைகளின் சிறப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக? **(2+4+2+4 =12 புள்ளிகள்)**

**05. "இறைவன் உறையும் இடமே கோயிலாகும்"**

1. ஆலயம் எனும் பதத்தினை விளக்குக?
2. கோயிலுக்கு செல்லும் முறையினைக் குறிப்பிடுக?
3. ஆலய வழிப்பாட்டில் நாம் மேற்கொள்ளும் நமஸ்காரங்கள் எவை?
4. ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் சரியைத் தொண்டுகளைக் குறிப்பிட்டு அவற்றை மேற்கொள்வதனால் பெறும் நன்மைகளைக் குறிப்பிடுக? **(3+2+3+4 =12 புள்ளிகள்)**

**06. "இலங்கையிலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சைவம் தலைத்தோங்கி இருந்துது"**

1. இலங்கையில் சிவ வழிப்பாட்டை மேற்கொண்ட பூர்வீகக் குடிகள் யாவர்?
2. சிவிகசாலை,சொத்திசாலை என்பவற்றை விளர்குக?
3. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன் இங்கு காணப்பட்ட பஞ்ச ஈஸ்வரங்கள் எவை?
4. திருகோணமலையிலுள்ள "கன்னியா தீர்த்தம்" யாரால் அமைக்கப்பட்டது?
5. இலங்கையிலுள்ள பாடல் பெற்ற தலங்கள் இரண்டும் எவை? **(2+2+4+2+2) =12 புள்ளிகள்)**

**07. "ஆலய வழிபாடு ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கும்"**

1. நகுலேச்சர ஆலயத்தின் இறைவன், இறைவி, தலவிருட்சம், தீர்த்தம் என்பவற்றைக் குறிப்பிடுக?
2. கீரிமலைத் தீர்த்தத்தின் சிறப்பு யாது?
3. கொத்துக் குளம் அம்மன் ஆலயத்தில் இடம்பெறும் 52 சிறப்பு பூசைகளில் நான்கிகைக் குறிப்பிடுக?
4. குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் நிர்வாகம் யாரால் மேற்கொள்ளப்படுகின்றது?

**(3+4+3+2) =12 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank